## சுருக்கம்

1939–ஆம் ஆண்டைய தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம் – திரைப்படங்கள் – தமிழிலேயே பெயர் சூட்டப்படும் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்தல் – அடிப்படைத் தகுதிகள் மாற்றியமைத்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி (மற்றும்) பதிவுத் (சி1) துறை

அரசாணை (நிலை) எண்:89 — நாள்: 21.7.2011.

27242

ஆடி – 5,
திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 72, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 22.7.2006.
2. அரசாணை (நிலை) எண். 147, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 20.11.2006.
3. அரசாணை (நிலை) எண். 85, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 30.3.2007.
4. அரசாணை (நிலை) எண். 159, வணிகவரி(ம)பதிவுத்துறை, நாள் 22.8.2007.

---

ஆணை :

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான வரி விலக்கு அளிக்கப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கேளிக்கை வரிவிலக்கு பழைய திரைப்படங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ் திரைப்படங்களின் காப்புரிமை வைத்திருப்போருக்கும் கேளிக்கை வரிவிலக்கு நீட்டிக்கப்பட்டது. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கேளிக்கை வரிச்சலுகை பெற, திரையிடப்படும் பழைய மற்றும் புதிய திரைப்படங்களின் தமிழ் பெயர், தமிழ் பண்பாட்டிற்கு உகந்ததாகவும், கண்ணியமானதாகவும் உள்ளதா என ஆய்வு செய்து பரிந்துரை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டது.

2. திரைப்படங்களுக்கு தமிழில் பெயரிடப்பட்டால் மட்டுமே அத்திரைப்படங்களின் கதைக்கரு தமிழ் பண்பாட்டிற்கு உகந்ததாகவும், கண்ணியமானதாகவும் உள்ளது என உறுதி செய்ய இயலவில்லை. மேலும் சில தரமில்லாத திரைப்படங்கள் தமிழில் பெயரிடப்பட்டதால் மட்டுமே கேளிக்கை வரி விலக்கு பெற்று விடுகின்றன.

3. மேற்கண்ட சூழ்நிலையில் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், கீழ்க்கண்ட கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

(1) அவ்வாறான திரைப்படம், திரைப்பட தணிக்கை வாரியத்திடமிருந்து "U" சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

(2) திரைப்படத்தின் கதையின் கருவானது தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்.

(3) திரைப்படத்தின் தேவையை கருதி பிறமொழிகளை பயன்படுத்தும் காட்சிகளைத் தவிர பெருமளவில் திரைப்படத்தின் வசனங்கள் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும்.

(4) திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசங்கள் அதிக அளவில் இடம் பெறுமேயானால் அத்திரைப்படம் வரிவிலக்கு பெறப்படுவதற்கான தகுதியை இழக்கும்.

மேற்கண்ட வரையறைகள், திரைப்படங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு கோரப்பட்டு தற்போது நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கும் பொருந்தும். மேலும் கேளிக்கை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய ஒரு புதிய தனிக்குழு ஏற்படுத்தப்படும் என அரசு ஆணையிடுகிறது. அவ்வாறான புதிய குழு அமைப்பதற்கான ஆணை தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்
அரசு செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–108.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி வரி மற்றும் பதிவுத்துறை) சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சித்துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை –9.
பொது (சிறப்பு–அ) துறை சென்னை–9.
பொது (மி.க.) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.